# ஆகஸ்ட்– 01 – செவ்வாய்

## புனித அல்போன்ஸ் லிகோரி

## ஆண்டவரின் செயல்கள் நீதியானவை: ஒடுக்கப்பட்டோர் அனைவருக்கும் அவர் உரிமைகளை வழங்குகின்றார். திபா. 103:6

### முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 33:7–11,34:5–9,28

மோசே பாளையத்துக்கு வெளியே கூடாரத்தைத் தூக்கிச் செல்வதும் பாளையத்திற்கு வெகு தூரத்தில் கூடாரம் அடிப்பதும் வழக்கம். அதற்கு அவர் சந்திப்புக் கூடாரம் என்று பெயரிட்டார். ஆண்டவரைத் தேடும் யாவரும் பாளையத்துக்கு வெளியேயுள்ள சந்திப்புக் கூடாரத்திற்குச் செல்வர்.மோசே கூடாரத்துக்குச் செல்லும் போதெல்லாம் மக்கள் அனைவரும் அவரவர் கூடார நுழைவாயிலில் எழுந்து நின்றுகொண்டு, அவர் கூடாரத்தில் நுழையும்வரை அவரைப் பார்த்துக் கொண்டேயிருப்பர்.மோசே கூடாரத்தில் நுழைந்ததும், மேகத்தூண் இறங்கிவந்து கூடார நுழைவாயிலில் நின்று கொள்ளும். அப்போது கடவுள் மோசேயிடம் பேசுவார்.கூடார நுழைவாயிலில் மேகத்தூண் நின்று கொண்டிருப்பதை மக்கள் அனைவரும் காண்பர். அப்போது அவரவர் கூடார நுழைவாயிலில் நின்றுகொண்டே மக்கள் அனைவரும் வணங்கித்தொழுவர். ஒருவன் தன் நண்பனிடம் பேசுவது போலவே ஆண்டவரும் முகமுகமாய் மோசேயிடம் பேசுவார். பின்னர் மோசே பாளையத்துக்குத் திரும்புவார். இளைஞனும் நூனின் மகனுமான யோசுவா என்ற அவருடைய உதவியாளர் கூடாரத்தை விட்டகலாமல் இருப்பார். ஆண்டவர் மேகத்தில் இறங்கிவந்து, அங்கே அவர் பக்கமாய் நின்றுகொண்டு, ”ஆண்டவர்” என்ற பெயரை அறிவித்தார்.அப்போது ஆண்டவர் அவர் முன்னிலையில் கடந்து செல்கையில், ”ஆண்டவர்! ஆண்டவர்! இரக்கமும் பரிவும் உள்ள இறைவன் சினம் கொள்ளத் தயங்குபவர் பேரன்பு மிக்கவர் நம்பிக்கைக்கு உரியவர்.ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர் கொடுமையையும் குற்றத்தையும் பாவத்தையும் மன்னிப்பவர் ஆயினும், தண்டனைக்குத் தப்பவிடாமல் தந்தையரின் கொடுமையைப் பிள்ளைகள் மேலும் பிள்ளைகளின் பிள்ளைகள் மேலும், மூன்றாம் நான்காம் தலைமுறைவரை தண்டித்துத் தீர்ப்பவர்” என அறிவித்தார்.உடனே மோசே விரைந்து தரைமட்டும் தாழ்ந்து வணங்கி,”என்தலைவரே! நான் உண்மையிலேயே உம் பார்வையில் தயைபெற்றவன் என்றால், இவர்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள் எனினும், என் தலைவரே! நீர் எங்களோடு வந்தருளும். எங்கள் கொடுமையையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து எங்களை உம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்ளும்” என்றார். அவர் அங்கே நாற்பது பகலும் நாற்பது இரவும் ஆண்டவருடன் இருந்தார். அப்போது அவர் அப்பம் உண்ணவும் இல்லை தண்ணீர் பருகவும் இல்லை. உடன்படிக்கையின் வார்த்தைகளான பத்துக் கட்டளைகளை அவர் பலகையின் மேல் எழுதினார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்

**நற்செய்தி :** மத்தேயு 13 : 36 – 43

அதன்பின்பு இயேசு மக்கள் கூட்டத்தினரை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தார். அப்போது அவருடைய சீடர்கள் அவரருகே வந்து, ”வயலில் தோன்றிய களைகள்பற்றிய உவமையை எங்களுக்கு விளக்கிக் கூறும்” என்றனர். அதற்கு அவர் பின் வருமாறு கூறினார் ”நல்ல விதைகளை விதைப்பவர் மானிடமகன் வயல், இவ்வுலகம் நல்ல விதைகள், கடவுளின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் களைகள், தீயோனைச் சேர்ந்தவர்கள். அவற்றை விதைக்கும் பகைவன், அலகை அறுவடை, உலகின்முடிவு அறுவடை செய்வோர், வானதூதர்.எவ்வாறு களைகளைப் பறித்துத் தீக்கிரையாக்குவார்களோ அவ்வாறே உலக முடிவிலும் நடக்கும்.மானிட மகன் தம் வானதூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய ஆட்சிக்குத் தடையாக உள்ள அனைவரையும் நெறிகெட்டோரையும் ஒன்று சேர்ப்பார்கள். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவார்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.அப்போது நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவனைப்போல் ஒளிவீசுவர் கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்.” என்றார்

**தியானம்:** இன்றைய இறைவாசகத்தில் சீடர்கள் இயேசுவிடம் வயலில் தோன்றிய களைகள் பற்றிய உவமையின் விளக்கம் கேட்கின்றனர். இயேசு அவர்களிடம் ”இறைமகன் ” தான் நல்ல விதைகளை விதைப்பவர் என்றும் ”நல்ல விதைகள்” இறைவனின் அன்புப் பிள்ளைகள் என்றும் விளக்கம் தருகின்றார். வயலில் தோன்றிய களைகள் தீய ஆவியால் விதைக்கப்பட்டவை என்றும் அவைகள் தீய ஆவியின் பிள்ளைகளுக்கு ஒப்பாகும். பின்பு இயேசு இறுதிக்காலத்தில் தீய பிள்ளைகளின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பதை விளக்குகின்றார். நாம் நம்மையே கேட்டுக்கொள்வோம். ஏன ̇ வாழ்க்கையில் நல்ல விதைகளை விதைக்கின்றேனா? எந்த நிலையில் நல்ல விதைகள் களைகளை விட அதிகமாக இருக்கின்றது, மாற்றத்திற்காக நான் என்ன செய்ய வேண்டும். நம்மில் யாருக்கும் பயனில்லாத பாத்திரமாக தீய கனிதரும் மரமாக வாழ விருப்பம் இருப்பதில்லை , ஆனாலும் களைகள் நம் வாழ்வில் இருக்கத்தான் செய்கிறது.கண்டு பிடிப்போம். எவ்வளவு ஆழமான களைகள் நம் வாழ்வில் வேரூன்றி கிடக்கிறது . களைகளை எப்படி வேரோடு பிடிங்கி எறிந்து நல்ல கதிர்களை வளர செய்ய முனைவோம். அப்படியானால் வாழ்வின் நிலைகளை இனம் கண்டு கொண்டு நற்கதிர்களை காத்திடுவோம். நற்பலன் தரும் வாழ்வையும் வளர்ச்சியையும் தேர்ந்தெடுப்போம். வாழ்வின் அனுபவங்களை கருவூலமாக்கி களைகளை அகற்றிடுவோம். என்வாழ்வில் களைகளை அகற்றிட இயேசுவிடம் இறைஞ்சுவோம். இயேசுவின் அருளையும் இரக்கத்தையும் கதிர்களாக அருவடை செய்வோம்.